# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2089/33 - 2018 සැප්තැම්බර් මස 19 වැනි බදාදා - 2018.09.19

*2089/33 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில், 243F திருக்கடலூர் கிராம அலுவலர் பிரிவில் திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்டதும் நில அளவையாளர் அதிபதியின் 2018.07.07 ஆந் திகதிய பி. பி. திரி 28 ஆம் இலக்கத் துண்டிலக்கம் 320, 323 இன் 0.6395 ஹெக்டயார், 3.2362 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டுகள் :

**01. துண்டு இல. 320 ; விஸ்தீரணம்: 0.6395 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல. 26 மற்றும் 25 ; கிழக்கு : துண்டு இல. 25, 26, 25, 322 மற்றும் 321 ; தெற்கு : துண்டு இல. 321 மற்றும் வடக்குக் கடற்கரை வீதி ; மேற்கு: வடக்குக் கடற்கரை வீதி மற்றும் துண்டு இல. 26 மற்றும் 25.

**02. துண்டு இல. 323 ; விஸ்தீரணம்: 3.2362 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல. 321, 322, 31 மற்றும் 33 ; கிழக்கு : துண்டு இல. 31, 33, 328, 327, 326 மற்றும் 324 ; தெற்கு : துண்டு இல. 328, 327, 326, 324 மற்றும் வடக்குக் கடற்கரை வீதி; மேற்கு: வடக்குக் கடற்கரை வீதி துண்டு இல. 321 மற்றும் 322.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜே.எஸ். அருள்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.

பிரதேச செயலகம்,
பட்டினமும் சூழலும்,
2018, செத்தெம்பர் 11.

10 - 103


1A G 28559 - 37 (2018/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.